# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1982/24 - 2016 අගෝස්තු මස 31 වැනි බදාදා - 2016.08.31

*1982/24ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 31 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

*எனது.கு. இல.: 2016/03.*

*காணி.அ.கு.இல.: 4-3/6/2015/எச்டப்ளிவ்/270.*

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

***எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :***

தென் மாகாணத்தில், ஹம்பந்தோட்டை மாவட்டத்தில், சூரியவெவ பிரதேச செயலாளர் பிரிவில், சூரியவெவ கிராமத்தில், இல 109, அந்தரவெவ கிராம அலுவலர் பிரிவு, மாகம் பத்துவ சிறு பிரிவில் அமைந்துள்ள, அம்பாந்தோட்டை நில அளவை அதிபதி சார்பாக நில அளவை அத்தியட்சகரினால் 2016.06.30 ஆம் திகதி தயாரிக்கப்பட்ட பிரதேசவியல் வரைபட இல. 4, உள் வரைபட இல. 374 மற்றும் தாள் இல. 594 இல் விபரிக்கப்பட்டுள்ள 1.7525 ஹெக்டயார் இல் ட8712 தொடக்கம் ட8713 வரை உள்ள காணித்துண்டு ( 01 துண்டு) எல்லைகள் :-

*1.* **துண்டு இலக்கம் ட8712**

காணியின் பெயர்: அஹல அந்தரவெவ கெலே; காணியின் விபரம்: காடு; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: - (ட8711 ஆவது காணித்துண்டின் பகுதி); காணியின் விஸ்தீரணம்: 1.7525 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2016.09.22 ஆந் திகதி மு.ப. 09.00 மணிக்கு சூரியவெவ பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2016.09.29 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

நாமல் லியனகே,
பிரதேச செயலாளர் மற்றும் காணி எடுத்தல் அதிகாரி,
சூரியவெவ பிரதேச செயலாளர் பிரிவு.

பிரதேச செயலகம்,
சூரியவெவ,
2016,ஒகத்து29.

*09 - 613*




இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.